The Hindu (English)
Dated: 25-10-2024

# Party representatives flag anomalies in electoral rolls

## The need for removal of duplicate entries and names of dead people from the electoral rolls and correcting mismatch between the voters' photos and names were among the issues highlighted

**The Hindu Bureau**
CHENNAI

The need for the removal of duplicate entries and names of dead people from the electoral rolls and correcting the mismatch between the voters' photos and names were among the major issues flagged by representatives of recognised political parties at a meeting organised by the Election Commission of India (EC) on Thursday.

Representatives of nine parties attended the meeting chaired by Chief Electoral Officer Satyabrata Sahoo in Chennai.



Chief Electoral Officer Satyabrata Sahoo chairing the meeting with representatives of parties on Thursday. SPECIAL ARRANGEMENT

**Names deleted: DMK**

DMK representative R.S. Bharathi said his party had flagged various issues, but they had not been resolved. He said the entries did not match with the rolls that officials at the polling booths had during the 2024 Lok Sabha election. The names of many voters of a religion were deleted from the rolls, and the DMK flagged the issue, he said. While many of the dead were still part of the rolls, many of those alive could not find their names, he added. BJP functionary Karu. Nagarajan said that while the name of the husband was present on the rolls, his wife's name was absent and in some cases, the parents were part of the rolls, but their children were not. "We asked how a person residing at the same address for long could go missing from the rolls."

His party also questioned how polling percentage could be arrived at when about 20% of the voters on the rolls shifted out of an area.

AIADMK leader and former Minister D. Jayakumar said his party had flagged several issues at such meetings organised by the Election Commission, but they were yet to be resolved. The mismatch between the photos and names of the voters was among the issues highlighted, he said. "Many persons, dead for 10 or 15 years; remain on the rolls," Mr. Jayakumar said, pointing out that death certificates could be sourced from the department concerned and the rolls could be cleaned up.

Communist Party of India functionary G.R. Ravindranath said the Election Commission should distribute forms for inclusion of names in the rolls to students who were about to attain the age of 18. "We insisted that the forms be issued to them in colleges. The details of the camps should be advertised through the media," he said. Aam Aadmi Party functionary Stella Mary insisted that the names of the dead and the duplicate entries be taken off the rolls. Representatives of the Congress, the CPI(M), and the DMDK also took part at the meeting. The EC will release integrated draft rolls on October 29. Claims and objections can be filed between October 29 and November 28. Special campaigns are being planned for November 16 and 17 and 23 and 24. The final rolls will be published on January 6, 2025.

The Times of India
Dated: 25.10.2024

# Parties unite to demand error-free electoral rolls

Times News Network

**Chennai**: National and state-recognised political parties on Thursday accused the Election Commission of committing errors in the photo electoral rolls. They urged the commission to produce error-free rolls during its special summary revision being undertaken from Oct 29 to Nov 28. The final electoral rolls would be published on Jan 6, 2025.

DMK organisation secretary R S Bharathi criticised the commission for not addressing discrepancies pointed out by DMK in the past, including issues in general elections. He said Muslim community members were unfairly removed from the electoral roll, particularly in Kadayanallur and Tambaram constituencies. "There was a difference between the roll handed to parties in the preceding months and the roll used by the election officer on the polling day," Bharathi said.

Former AIADMK minister D Jayakumar expressed concerns about a possible conspiracy aimed at removing their supporters' names from the electoral rolls, calling for a probe. "The revenue department can get death certificates in every local body and remove the names. At least 10% of voters from the list can be removed," he said.

TNCC legal wing chairman K Chandramohan alleged similar discrepancies, saying names of individuals were missing from the list at polling stations, despite booth slips and electors' photo identity cards being issued by the commission.

BJP vice-president Karu Nagarajan said a quarter of the electoral rolls includes names of those who have either moved away or passed away. CPI's G R Ravindranath suggested that the commission provide applications in advance to students, who turned 17 years old.

## FINAL ELECTORAL ROLLS ON JAN 6

Chief electoral officer Satyabrata Sahoo explained at length to party representatives about various activities and schedules for the summary revision. He said that booth level agents from the parties can list the dead and shifted electors and present this information to booth level officers in prescribed formats. According to instructions from the commission, recognised parties can appoint booth-level agents for each polling station to assist officers in identifying corrections during the summary revision and on special campaign days.

Representatives from DMK, AIADMK, Congress, BJP, CPI, CPM, DMDK, BSP, Aam Aadmi, and NPP participated in the meeting held at the secretariat.

The Hindu (Tamil)
Dated: 25.10.2024



↑ சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தலைமையில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள். படம்: ம.பிரபு

### இறந்தவர்கள், முகவரி மாறியவர்கள் பெயர்களை நீக்கி

# 100% சரியான பட்டியலை வெளியிட வேண்டும்

## ▶ தமிழக தலைமை தேர்தல் அதிகாரியிடம் கட்சிகள் வலியுறுத்தல்

● சென்னை

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் இம்மாத இறுதியில் தொடங்கப்பட உள்ள நிலையில், இறந்தவர்கள், முகவரி மாறியவர்களின் பெயர்கள், இரட்டை பதிவுகளை நீக்கி 100 சதவீதம் சரியான பட்டியலை வெளியிட அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும், தலைமை தேர்தல் அதிகாரியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

தலைமைச்செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், திமுக சார்பில் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சட்டப்பிரிவு செயலாளர் என்.ஆர்.இளங்கோ, அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், பொள்ளாச்சி ஜெயராமன், பாஜக சார்பில் மாநில துணைத்தலைவர் கரு.நாகராஜன், மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன், காங்கிரஸ் சார்பில் சந்திரமோகன், ராஜேஷ், தேமுதிக துணை செயலாளர் பார்த்தசாரதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் ஆறுமுக நயினார், சுந்தரராஜ், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் ரவீந்திரநாத், ஆம் ஆத்மி சார்பில் மகளிர் அணி தலைவர் ஸ்டெல்லா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்துக்குப்பின் அரசியல் கட்சி பிரதிநிதிகள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

**ஆர்.எஸ்.பாரதி (திமுக):** ஒவ்வொரு அனைத்துக்கட்சி கூட்டத்திலும் திமுக சார்பில், வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை சுட்டிக்காட்டியும், இதுவரை தேர்தல் ஆணையம் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. இறந்தவர்கள் பட்டியலை, உள்ளாட்சி நிர்வாகங்களிடம் பெற்று நீக்கிவிடலாம் என்று தெரிவித்துள்ளோம்.

**டி.ஜெயக்குமார் (அதிமுக):** இறப்பு சான்றிதழ்களை உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் துறையிடம் இருந்து பெற்று இறந்தவர்கள் பெயர்களை நீக்கிவிடலாம். அதேபோல், முகவரி மாறியவர்களின் பெயர்களை தொழில்நுட்பம் மூலம் நீக்கி, 100 சதவீதம் சரியான வாக்காளர் பட்டியலை தயாரித்து வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

**கரு.நாகராஜன் (பாஜக):** முன்னாள் மேயர் சைதை துரைசாமியின் மகன், வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் ஆகிய இறந்தவர்கள் பெயர்கள் இன்னும் பட்டியலில் உள்ளது. மாநகராட்சி, வருவாய் துறையில் இருந்து இறப்பு சான்றிதழ் வழங்கப்படுபவர்கள் பெயர்களை பெற்று நீக்கலாம் என்று ஆலோசனை வழங்கியுள்ளோம்.

**ஜி.ஆர்.ரவீந்திரநாத் (இந்திய கம்யூனிஸ்ட்):** பிளஸ் 1, பிளஸ் 2 மாணவர்களுக்கு பள்ளிகளிலேயே படிவங்களை வழங்கி, வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும். தேர்தல் நெருங்கும் நேரத்தில் பலரது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் விடுபடுகிறது. இந்த போக்கை கைவிட வேண்டும்

இவ்வாறு தெரிவித்தனர்.

**ஜன.6-ல் இறுதி பட்டியல்**

இதுகுறித்து தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளின் முதல் கட்டமாக அக்.29-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். அன்று முதல் நவ.28-ம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல், திருத்தம் மேற்கொள்வதற்கான கோரிக்கை மனுக்கள் பெறப்படும்.

நவ.16, 17 மற்றும் 23, 24 ஆகிய சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வாக்குச்சாவடிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறும். இந்த முகாம்களிலும் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல், திருத்தம் செய்வதற்கான விண்ணப்பங்கள் வழங்கலாம். இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்தாண்டு ஜனவரி 6-ம் தேதி வெளியிடப்படும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

Daily Thanthi
Dated: 25.10.2024

இறந்தவர்களின் பெயர்களை

# இறப்புச் சான்றிதழின் அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும்

## தேர்தல் கமிஷனிடம் அரசியல் கட்சிகள் வலியுறுத்தல்

சென்னை, அக்.25-

இறந்த வாக்காளர்களின் பெயர்களை அவர்களது இறப்புச் சான்றிதழின் அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்று தேர்தல் கமிஷனிடம் அரசியல் கட்சிகள் வலியுறுத்தின.

### அனைத்து கட்சி கூட்டம்

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தப் பணிகள் விரைவில் தொடங்க உள்ளன. இதற்காக வருகிற 29-ந்தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் இருந்தால் அதை வாக்காளர்கள் சரி செய்துகொள்ளவும், 18 வயது பூர்த்தியானவர்கள் மற்றும் 17 வயது கடந்தவர்கள் தங்களை வாக்காளராக பதிவு செய்து கொள்ளவும் இந்த காலகட்டத்தில் அவகாசம் அளிக்கப்படும். இதை பயன்படுத்தி அதற்கான விண்ணப்பங்களை அளிக்கலாம்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நிலையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு நேற்று ஆலோசனை நடத்தினார்.

### தி.மு.க. கருத்து

இந்த கூட்டத்தில் தி.மு.க. சார்பில் ஆர்.எஸ்.பாரதி, என்.ஆர்.இளங்கோ, அ.தி.மு.க. சார்பில் ஜெயக்குமார், பொள்ளாச்சி ஜெயராமன், பா.ஜனதா கட்சி சார்பில் கரு.நாகராஜன், கராத்தே தியாகராஜன், தே.மு.தி.க. சார்பில் பார்த்தசாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ரவீந்திரநாத், காங்கிரஸ் சார்பில் சந்திரமோகன், ராஜேஷ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் ஆறுமுக நயினார், சுந்தரராஜ், ஆம் ஆத்மி சார்பில் ஸ்டெல்லா ஆகியோர் பங்கேற்று கருத்து தெரிவித்தனர்.

பின்னர் பத்திரிகையாளர்களுக்கு அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-

ஆர்.எஸ்.பாரதி (தி.மு.க.): இறந்தவர்களின் பெயர்களை உள்ளாட்சி நிர்வாகங்களிடம் இருந்து பெற்று, அவற்றை பட்டியலில் இருந்து நீக்கிவிடலாம் என்று கூறியுள்ளோம். முறையாக வாக்காளர் பட்டியல் தயாரிக்காததால், வாக்குப்பதிவு சதவீதம் குறைந்துள்ளதாக தெரிகிறது. எனவே குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்படி கூறியுள்ளோம்.

### பா.ஜனதா

கரு.நாகராஜன் (பா.ஜனதா):- கடந்த தேர்தல் வாக்குப்பதிவின்போது ஏற்பட்ட குளறுபடிகளை சுட்டிக்காட்டினோம். மாநகராட்சி, வருவாய்த்துறையில் இருந்து இறப்பு சான்றிதழை பெற்று, வாக்காளர் பட்டியலில் இருந்து அவர்களது பெயர்களை இருந்து நீக்கலாம் என்று ஆலோசனை வழங்கியுள்ளோம்.

### அ.தி.மு.க.

ஜெயக்குமார் (அ.தி.மு.க.):- வாக்காளர் பட்டியலில் குளறுபடிகள் தொடர்கின்றன. புகைப்படம் மாறுவது, குடிபெயர்ந்த வாக்காளர்கள் பெயர் 2 இடங்களில் இடம் பெறுவது குறித்து பலமுறை தெரிவித்த பின்னரும் அவை அப்படியே தொடர்கின்றன. இறந்தவர்கள் 10, 15 ஆண்டுகளாக வாக்காளர் பட்டியலில் உயிருடன் இருக்கின்றனர். இறப்பு சான்றிதழ்களை உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் வருவாய் துறையிடம் இருந்து பெற்று இறந்தவர்கள் பெயர்களை நீக்கிவிடலாம்.

இதே கருத்தை அனைத்து கட்சி நிர்வாகிகளும் தெரிவித்தனர்.

இதனிடையே தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

### சிறப்பு முகாம்கள்

ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் 29-ந்தேதியன்று வெளியிடப்படும். பட்டியலில் பெயர் சேர்ப்பு, திருத்தம், ஆட்சேபனை ஆகியவற்றுக்காக 29.10.2024 முதல் 28.11.2024 வரை விண்ணப்பிக்கலாம்.

அதற்கான சிறப்பு முகாம்கள் அடுத்த நவம்பர் மாதம் 16, 17, 23, 24 ஆகிய தேதிகளில் நடைபெறும். அனைத்து திருத்தங்களையும் மேற்கொண்ட பிறகு இறுதி வாக்காளர் பட்டியல் வரும் ஜனவரி 6-ந் தேதி வெளியிடப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வாக்குச்சாவடி நிலை முகவர்களை நியமிக்கலாம். அம்முகவர்கள் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் மற்றும் சிறப்பு முகாம் நாட்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு திருத்தங்களை மேற்கொள்ள உதவி செய்யலாம்.

இவ்வாறு அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

Dinamalar, Dated: 25.10.2024

# வாக்காளர் பட்டியலில் வாழும் இறந்தவர்கள்: கட்சிகள் புகார்

சென்னை, அக். 25-

'இறந்தவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கினால், தமிழகத்தில் 100 சதவீத ஓட்டுப்பதிவு நடக்கும்' என, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி நடத்திய ஆலோசனை கூட்டத்தில் அரசியல் கட்சியினர் காட்டியதற்கு, இதுவரை தேர்தல் கமிஷன் செவி சாய்த்ததாக தெரியவில்லை. இறந்தவர்களின் பெயர்கள் அப்படியே உள்ளன.

லோக்சபா தேர்தலின் போது, அரசியல் கட்சிகளிடம் இருந்த பட்டியலுக்கும், தேர்தல் அதிகாரிகளிடம் இருந்த பட்டியலுக்கும் நிறைய வேறுபாடுகள் குளறுபடிகள் தொடர்கின்றன. வாக்காளர் பட்டியலில், 234 தொகுதிகளிலும் இறந்தவர்கள் வாழ்கின்றனர்.

இதனால், கள்ள ஓட்டு போடும் சூழல் ஏற்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளிடம், இறந்தவர்களின் பெயர் பட்டியலை பெற்று, அவற்றை

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### 29ல் வரைவு வாக்காளர் பட்டியல்

'தமிழகத்தில் வரும் 29ம் தேதி, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்' என, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு"